# January 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா-பாகிஸ்தான் மோதல் உள்பட 8 போர்களை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறி, அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தானே தகுதி யானவர் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பலமுறை தெரிவித்து வந்தார்.

(i) இந்தச் சூழலில், உண்மையில் பரிசு அறிவிக்கப்பட்ட வெனிசுலாவின் மரியா கொரினா மச்சாடோ, தனது பதக்கத்தை டிரம்ப்பிடம் வழங்கிய நிகழ்வு சர்வதேச அளவில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ii) வெனிசுலாவின் சுதந்திரத்துக்காக டிரம்ப் காட்டிய அர்ப் பணிப்பைப் பாராட்டியே இந்தப் பதக்கத்தை அவருக்கு வழங்கியதாக மரியா கொரினா மச்சாடோ தெரிவித்தார். ஆனால், இது குறித்து நோபல் அமைதி மையம் ஒரு தெளிவான விளக்கத்தை அளித்தது.

(iii) ஒருமுறை நோபல் பரிசு அறிவிக்கப்பட்டால், அதை ரத்து செய்யவோ, பகிர்ந்து கொள்ளவோ அல்லது மற்றொருவர் பெயருக்கு மாற்றவோ முடியாது. ஒரு வெற்றியாளர் தனது பதக்கத்தை யாரிடம் கொடுத்தாலும், அதிகாரபூர்வ ஆவணங்களில் அவரே நோபல் வெற்றியாளராகத் தொடர்வார்.

(iv) வாழ்நாள் சாதனைக்கான உச்சபட்ச அங்கீகாரமாகக் கருதப்படும் இந்த விலை மதிப்பற்ற தங்கப் பதக்கங்கள் கைமாறுவது வரலாற்றில் புதிதல்ல. தியாகம், அரசியல், நிதித் தேவை எனப் பல்வேறு காரணங்களுக்காக இந்தப் பதக்கங்கள் கடந்த காலங்களில் கைமாறிய கதைகளை இங்கே காண்போம்.

(v) மனிதாபிமானத்துக்காக - 1939-ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் பின்லாந்து மீது போர் தொடுத்தபோது, அந்நாட்டு அகதிகளுக்கு உதவ டென்மார்க்கைச் சேர்ந்த இயற்பியலாளர்கள் நீல்ஸ் போர், ஆகஸ்ட் க்ரோக் ஆகியோர் தங்களின் நோபல் பதக்கங்களை ஏலம் விட்டனர். பின்னர், அந்தப் பதக்கங்கள் அருங்காட்சியகங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. நீல்ஸ் போரின் மகன் ஆஜே போர் கடந்த 1975-இல் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றார். இவரது பதக்கமும் 2011 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் ஏலத்துக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

(vi) அதேபோல், 2021-இல் நோபல் பரிசு வென்ற ரஷிய பத்திரிகையாளர் டிமிட்ரி முரடோவ் உக்ரைன் போரால் பாதிக்கப்பட்ட அகதிச் சிறுவர்களுக்கு உதவ தனது பதக்கத்தை ஏலம் விட்டார். அந்தத் தொகை முழுவதையும் யுனிசெஃப் அமைப்புக்கு வழங்கினார்.

(vii) நாஜிகளுக்கு ஆதரவாக....: 1920-இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு வென்ற நார்வே எழுத்தாளர் நட்ஹாம்சன், நாஜி கொள்கைகளுக்கு ஆதரவானவர். இரண்டாம் உலகப் போரின் போது, அவர் தனது பதக்கத்தை ஹிட்லரின் முன்னணித் தளபதிகளில் ஒருவரான ஜோசப் கோய பல்ஸுக்குப் பரிசாக வழங்கியது பெரும் விமர்சனத்துக்குள்ளானது.

(viii) ஆராய்ச்சி செலவுக்காக...: 'டிஎன்ஏ' அமைப்பைக் கண்டறிந்த ஜேம்ஸ் வாட்சன், உயிருடன் இருக்கும்போதே தனது பதக்கத்தை விற்ற முதல் நபர் ஆவார். இவர் தனது ஆராய்ச்சி செலவுகளுக்காகப் பதக்கத்தை ஏலம் விட்டார்.

ஆனால் இங்கே ஒருநெகிழ்ச்சியான திருப்பம் நிகழ்ந்தது. பதக்கத்தை ஏலத்தில் எடுத்த ரஷிய கோடீஸ்வரர் அலிஷர் உஸ்மானோவ், 'ஒரு மாபெரும் விஞ்ஞானியின் பதக்கம் அவரிடமே இருக்க வேண்டும்' எனக் கூறி, மீண்டும் வாட்சனிடமே அதை ஒப்படைத்து நெகிழ வைத்தார்.

(ix) புகழ்பெற்ற பொருளாதார மேதை ஜான் நாஷ் பெற்ற பதக்கம், கடந்த 2019-இல் 7.35 லட்சம் டாலருக்கு ஏலம் போனது. பெரும்பாலான நோபல் வெற்றியாளர்கள் தங்களின் பதக்கங்களை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கும் தொகையை அறிவியல் ஆராய்ச்சி மற்றும் சமூக நல நோக்கங்களுக்கே பயன்படுத்தியுள்ளனர்.

(x) பதக்கங்கள் கைமாறினாலும், அந்தப் பதக்கத்துக்குப் பின்னால் இருக்கும் வெற்றியாளரின் உழைப்பும், அதன்மூலம் அவருக்குக் கிடைத்த உலகளாவிய கௌரவமும் என்றும் அவருக்கே உரியது.

2. நேபாளத்தில் வரும் மார்ச் 5-ஆம் தேதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் 4 முன்னாள் பிரதமர்கள் மீண்டும் களமிறங்கியுள்ளனர்.

(i) கடந்த ஆண்டு செப்டம்பரில், ஆட்சிக் கவிழ்ப்புக்கு வித்திட்ட நேபாள இளைஞர்களின் போராட் டங்களுக்குப் பிறகு, அரசியலில் புதிய முகங்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மீண்டும் பழைய தலைவர்களே வேட்புமனு தாக்கல் செய்திருப்பது மக்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ii) போராட்டங்கள் காரணமாகப் பதவி விலகிய முன்னாள் பிரதமரும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி- ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (சிபிஎன்-யுஎம்எல்) தலைவருமான கே.பி.சர்மா ஒலி, ஜாப்பா-5 தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

(iii) இவருக்கு முன்பு பிரதமராக இருந்த நேபாள கம்யூனிஸ்ட் கட்சி- மாவோயிஸ்ட் மையம் தலைவர் புஷ்ப கமல் தாஹால் பிரசண்டா கிழக்கு ருக்கும் தொகுதியில் களம் காண்கிறார்.

(iv) இவர்களுடன் முன்னாள் பிரதமர்களான நேபாளி கம்யூனிஸ்ட் கட்சியின் மாதவ் குமார் நேபாள் ரெவுதாஹட்-1 தொகுதியிலும், பிரகதிஷீல் லோகதந்திரிக் கட்சியின் பாபுராம் பட்டாராய் கூர்கா-2 தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

(v) இந்த நால்வருமே 70 வயதைக் கடந்தவர்கள் ஆவர். அதேநேரம், ஷேர் பகதூர் தேவுபா, ஜாலா நாத்கனல் ஆகிய முன்னாள் பிரதமர்கள் இம்முறைபோட்டியிடவில்லை.

(vi) நேபாள நாடாளுமன்றத்தின் கீழ வையான பிரதிநிதிகள் சபையில் மொத்தம் 275 இடங்கள் உள்ளன. இதில் 165 இடங்கள் நேரடித் தேர்தல் மூலம் நிரப்பப்படும். 110 இடங்கள் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒதுக்கப்படும்.

3. இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (60), நாசாவில் இருந்து ஓய்வு பெற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

(i) நாசாவில் 27 ஆண்டுகால பணிக் காலத்தில் 608 நாள்கள் விண்வெளியில் தங்கி சுனிதா வில்லியம்ஸ் சாதனை படைத்துள்ளார்.

(ii) 1998-இல் சுனிதா வில்லியம்ஸை விண்வெளி வீராங்கனையாக நாசா தேர்ந்தெடுத்து பயிற்சி வழங்கத் தொடங்கியது.

(iii) 2006, டிசம்பர் 9-ஆம்தேதி முதல் முறையாக அமெரிக்க விண்கல மானடிஸ்கவரியில் எஸ்டிஎஸ்-116 விண்வெளி திட்டத்தில் தனது விண்வெளி பயணத்தை தொடங்கினார். சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ஐஎஸ்எஸ்) பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட அவர் 195 நாள்களுக்குப்பின் எஸ்டி.எஸ்-117 விண்வெளி திட்டக் குழுவுடன் அட்லாண்டிஸ் விண்கலத்தில் 2007, ஜூன் 22-ஆம் தேதி அவர் பூமிக்கு திரும்பினார்.

(iv) 2012-ஆம் ஆண்டு ஜூலை 14- ஆம் தேதி கஜகஸ்தான் நாட்டில் உள்ள பைக்கானூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து விண்வெளிக்கு இரண்டாவது முறையாக பயணித்த அவர், 127 நாள்கள் விண்வெளியில் தங்கினார்.

(v) 2024, ஜூன் மாதம் அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார்லைனர் விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பேரி வில்மோர் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றனர். 8 நாள்களில் ஆய்வை மேற்கொண்டு அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 286 நாள்கள் விண்வெளியில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருவரும் 2025, மார்ச் மாதம் பூமிக்கு திரும்பினர்.

(vi) ஒட்டுமொத்தமாக மூன்று விண்வெளி பயணங்களையும் சேர்த்து அவர் விண்வெளியில் 62 மணி நேரம் 6 நிமிஷங்கள் நடைபயணம் மேற்கொண்டுள்ளார். இது உலகளவில் விண்வெளி வீராங்கனை ஒருவர் விண்வெளியில் மேற்கொண்ட அதிகபட்ச நடைபயணமாகும்.

(vii) விண்வெளியில் மாரத்தான் ஓடிய முதல் நபர் என்ற பெருமைக்கும் உரியவர் சுனிதா.

4. அகில இந்திய வழக்குரைஞர் கவுன்சில் (ஏஜபிஇ) தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகிறது. இத் தேர்வில் இறுதிப் பருவ சட்ட (எல்எல்பி) மாணவர்களும் பங்கேற்கலாம்' என்று உச்சநீதிமன்றத்தில் இந்திய வழக்குரைஞர் சங்கம் (பிசிஐ) தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(i) சட்டப் படிப்பை (எல்எல்பி) முடிக்கும் மாணவர்கள் வழக்குரைஞராக பணியாற்ற வழக்குரைஞர் கவுன்சிலில் (பார் கவுன்சில்) பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய, பிசிஐ சார்பில் நடத்தப்படும் ஏஜபிஇ தேர்வில் தகுதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ii) இந்த நிலையில், இந்த ஏஜபிஇ தேர்வில் பங்கேற்க எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களையும் அனுமதிக்க உத்தரவிடக் கோரி கடந்த 2024-ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், ஏஇபிஇ தேர்வில் எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களையும் அனுமதிக்க இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

(iii) எல்எல்பி முடிக்கும் மாணவர்கள் ஏஇபிஇ தேர்வுக்காக ஓராண்டு காத்திருப்பதை அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் அப்போது குறிப்பிட்டது.

(iv) இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

(v) அப்போது பிசிஐ தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், 'ஏஐபிஇ தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகிறது. இத்தேர்வில், எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களும் பங்கேற்கலாம். அதற்கேற்ப 'பிசிஐ விதிகள் 2026-ஐ பிசிஐ வகுத்துள்ளது' என்றார்.

5. தலைமைத் தேர்தல் ஆணையர் - ஞானேஷ் குமார்

6.மத்திய அரசின் நிதி ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டுவரும் அடல் ஓய்வூதியத் திட்டத்தை (ஏபிஓய்) வரும் 2030-31 நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

(i) தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ii) அமைப்புசாராத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் உள்பட 18 முதல் 40 வயதுக்குட்பட்ட அனைத்து இந்தியக் குடிமக்களும் 60 வயதுக்குப் பிறகு மாதம் ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை உத்தரவாத ஓய்வூதியம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை கடந்த 2015-ஆம் ஆண்டு மே 9-ஆம் தேதி மத்திய அரசு அறிமுகம் செய்தது. வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவர். சந்தாதாரரின் இறப்புக்குப் பிறகு அவரது துணைவருக்கும், அதன் பிறகு அவரால் நியமிக்கப்பட்ட பயனாளிக்கும் (நாமினி) பலன்கள் தொடரும். 2026-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி கணக்கின்படி இந்தத் திட்டத்தில் 8.66 கோடி சந்தாதாரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

(iii) எஸ்ஐடிபிஐ-க்கு ரூ.5,000 கோடி பங்கு மூலதனம்:

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) கடன் வழங்குவதை அதிகரிக்கும் நோக்கில் இந்திய சிறு நிறுவனங்கள் மேம்பாட்டு வங்கிக்கு (எஸ்ஐடிபிஐ) ரூ.5,000 கோடி பங்கு மூலதன ஆதரவை அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

(iv) மத்திய நிதிச் சேவைகள் துறை (டிஎஃப்எஸ்) மூன்று தவணைகளாக இந்தப் பங்கு மூலதன ஆதரவை எஸ்ஐடிபிஐ-க்கு வழங்க உள்ளது. இந்தக் கூடுதல் பங்கு மூலதனம் மூலம், குறு, சிறு, நடுத்தர நிறுனங்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் எஸ்ஐடிபிஐ கடன் வழங்குவது அதிகரிக்கும்.

(v) குறிப்பாக, இந்த வங்கி மூலம் 2025 நிதியாண்டில் 76.26 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்ட நிலையில், 2028-ஆம் நிதியாண்டில் அது 1.02 கோடியாக அதிகரிக்கும் (25.74 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் கூடுதல் பயனாளிகளாக சேர்க்கப்படுவர்).

(vi) இந்தத் துறையில் 1.12 கோடி புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.கிரீன்லாந்தை கைப்பற்றுவதில் மீண்டும் உறுதி தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப், அதற்குப் படை பலத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என்று கூறியுள்ளார்.

(i) டென்மார்க் நாட்டுக்குச் சொந்தமான கிரீன்லாந்து தீவு பகுதியளவு சுயாட்சி பிரதேசமாக செயல்பட்டு வருகிறது. அங்கு எண்ணெய், எரிவாயு, நிக்கல், கோபால்ட் உலோகங்களுடன் அரிய புவி கனிமங்களும் உள்ளதாகக் கூறப்படுகிறது. டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார அமைப்பின் ஆண்டுக் கூட்டத்தில் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப்.

(ii) சூப்பர்கண்டக்டர் சிப்கள், மின்சார வாகனங்கள், பசுமை எரிசக்தி தொழில்நுட்பங்கள், ராணுவத் தொழில்நுட்பங்களைத் தயாரிக்க அரிய புவி கனிமங்கள் மிகவும் அவசியம். தற்போது உலக அளவில் அந்தக் கனிமங்களில் பெருமளவு சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், அந்தக் கனிமங்களைப் பெறுவதற்கான மாற்று வழிகளை அமெரிக்கா தேடி வருவதாக தகவல் வெளியாகின.

(iii) இந்நிலையில், கிரீன்லாந்தை கைப்பற்ற அமெரிக்க அதிபர் டிரம்ப் தீவிரம் காட்டி வருகிறார். இது தொடர்பாக ஸ்விட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் உலகப் பொருளாதார அமைப்பின் ஆண்டு கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது:

வட அமெரிக்காவின் ஒரு பகுதிதான் கிரீன்லாந்து. அதன் உரிமையைப் பெற நான் விரும்புகிறேன். ஆனால், கிரீன்லாந்தை கைப்பற்ற நான் படைகளைப் பயன்படுத்த மாட்டேன்.

(iv) சர்வதேச பாதுகாப்புக்காக...:

கிரீன்லாந்தை கைப்பற்ற நினைப்பதற்கு அரிய புவி கனிமங்கள் காரணம் அல்ல. அங்கு அந்தக் கனிமங்கள் எதுவும் இல்லை. அமெரிக்காவின் உத்திசார்ந்த தேசியப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கு அமெரிக்கா வசம் கிரீன்லாந்து இருப்பது அவசியம்.

(v) 'ஏற்கெனவே கிரீன்லாந்தின் பிட்டுஃபிக் தளத்தில் 100-க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவ வீரர்கள் நிரந்தரமாக பணியில் உள்ளனர். 'இரண்டாம் உலகப் போர் காலத்தில் இருந்து அந்தத் தளத்தை அமெரிக்கா இயக்கி வருகிறது. டென்மார்க்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ள (ஒப்பந்தத்தின்படி, கிரீன்லாந்துக்கு கூடுதலாக தனது படை வீரர்களை அனுப்ப அமெரிக்காவுக்கு அதிகாரம் உள்ளது.

(vi) கிரீன்லாந்தை அமெரிக்காவால் மட்டுமே பாதுகாக்க முடியும். எனவே, கிரீன்லாந்தை அமெரிக்காவிடம் ஒப்படைப்பது குறித்து பேச்சைத் தொடங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

(vii) நேட்டோவால் அமெரிக்காவுக்குப் பயனில்லை: கிரீன்லாந்தை கைப்பற்ற நேட்டோ ராணுவ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அந்தக் கூட்டமைப்பில் அமெரிக்காவும் இடம் பெற்றுள்ள நிலையில், கிரீன்லாந்தை கைப்பற்றும் நடவடிக்கையை நேட்டோ அனுமதிக்க வேண்டும் என்று கூட்டத்தில் டிரம்ப் கூறினார்.

8. சென்னை, காஞ்சிபுரம் உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களில் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருவதாக பொது சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.

(i) இதையடுத்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத் துமாறும்,

மருத்துவமனைகளில் சிறப்பு வார்டுகளை அமைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ii) ஏடிஸ் வகை கொசுக்கள் மூலம் பரவும் சிக்குன்குனியா பாதிப்பு ஏற்பட்டால் காய்ச்சல், மூட்டு வலி, அதீத தசை வலி, உடல் அசதி ஆகிய அறிகுறிகள் காணப்படும்.

(iii) கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை தீவிர தாக்கத்தை ஏற்படுத்திய சிக்குன் குனியா பாதிப்பு, அதன் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதேவேளையில், டெங்கு மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் பரவல் அதிகரித்தது.

(iv) இந்த நிலையில், கடந்த சில மாதங்களாகவே சிக்குன்குனியாவின் தாக்கம் மீண்டும் ஏற்பட்டிருப்பதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்தனர். ஆனால், அதை பொது சுகாதாரத் துறை மறுத்து வந்தது.

(v) தற்போது சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தென்காசி, தேனி, கடலூர், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சிக்குன்குனியா அதிகரித்திருப்பதை சுகாதாரத் துறை உறுதி செய்துள்ளது.